**ஹக்மன பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 25 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து ஹக்மன பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | முன்னைய ஆண்டுகளின் 16 நிர்மாணவேலைகளுக்காக செலுத்த வேண்டிய ரூபா 1,887,447 இற்கான கடன்கொடுத்தோர் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கடன்கொடுத்தோர் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | கடந்த ஆண்டு மற்றும் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த கூட்டுத்தொகை ரூபா 1,952,529 தொகைக்கான நிலையான சொத்துக்களை மூலதப்படுத்தியிருக்கவில்லை. | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | மீளாய்வாண்டின் போது காபனிக் உரம் தயாரிக்கும் முற்றம் நிர்மாணிப்பதற்காக கொள்வனவு செய்திருந்த காணியின் பெறுமதி மற்றும் சேதனப் பசளை முற்றம் நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 9,324,508 தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது மூலதனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிர்மாண வேலை கடன்பட்டோர் மீதி ரூபா 5,658,218 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | கடன்பட்டோர் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய் வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (v) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய நிலையான வைப்புக்களுக்கான வட்டி ரூபா 350,042 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | வட்டி வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகளில் தயாரிக் கும் போது சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (vi) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பலவின இருப்பு மீதி ரூபா 69,675 இனை மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | பல்வேறு இருப்பு மீதி களின் கூட்டுத்தொகை ரூபா 69,582 மிகையாக கணக்கீடு செய்யப் பட்டதை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |
| (viii) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காபனிக் உரம் உற்பத்தி முற்றம் நிர்மாணிப்பதற்காக கொள்வனவு செய்திருந்த காணிக்காக செலுத்த வேண்டிய ரூபா 1,500,000 தொகைக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | கடன்கொடுத்தோர் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 கணக்குகள் தயாரிக்கும் போது ஏற்பட்டுள்ள தவறினை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத் தொகை ரூபா 40,363,835 தொகைக்கான 14 கணக்கு விடயங்கள் உரிய மீதிகள் மற்றும் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப் பட்டுள்ள மீதிகளிடையே, கூட்டுத்தொகை ரூபா 3,386,968 இற்கான சமமின்மைகள் காணப்பட்டன. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்கள் இணக்கஞ் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) தொங்கல் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பல ஆண்டுகள் முதல் முன்கொண்டு வந்து காணப்படும் ரூபா 873,211 இற்கான தொங்கல் கணக்கில் செலவு மீதியை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக கண்டறிந்து கணக்குகளில் தேவையான சீராக்கல் மேற்கொண்டு தொங்கல் கணக்கை தீர்க்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஈ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 17,985,988 தொகைக்கான 23 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | சுமார் 07 வருட காலம் முதல் மாற்றமின்றிக் காணப்படும் பெறுமதிகளாகக் காணப்படுவதுடன் எதிர்காலத்தில் துணை பதிவேடுகளை தேடிப்பெற்று முடிந்த அளவு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| (i) விதி 143 | திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்பு பேரேடு மாதாந்தம் கூட்டப்பட்டு கூட்டுத்தொகை பிரதான பேரேட்டுக் கணக்கு டன் சீராக்கல் செய்யப்பட் டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் விதி 143 இன் படி நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) விதி 193 | பாதீட்டு மற்றும் குறைநிரப்பு அங்கீகரிக்கப்பட்ட செலவு களுடன் செலவு விடயங்களின் உண்மையான செலவுகளை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பாக காரணங்களைக் காட்டும் கூற்றொன்று கணக்கு களுடன் சமர்ப்பித்திருக்க வில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகளுடன் அனுப்பு வதற்கு |
| (iii) விதி 213 | களஞ்சியத்தில் இருந்து பண்டங்கள் வழங்கும் போது சபைச் செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றிருக் கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் அந்தப் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் படி ஏல விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) 2015 ஜுலை 10 திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | பயன்பாட்டிலிருந்து அகற்றப் பட்டிருந்த 06 வாகனங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கை யின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் அந்தப் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் படி ஏல விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,586,757 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,773,619 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையினால் பேணப்பட்டிருந்த வங்கி நடைமுறை கணக்கு ஒன்றில் பல வருட காலத்திற்கு முன்னர் எட்டு சந்தர்ப்பங்களில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 15,910 தொகைக்கான காசோலைகள் மீளாய்வாண்டு இறுதி வரையும் தேறியிருக்கவில்லை. | மதிப்பளிக்கப் படாத காசோலைகள் தொடர்பாக பணத்தை விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தீர்க்கப்படும். |

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,531,100 | 1,621,679 | 1,386,345 | 1,333,927 | 1,032,500 | 1,579,059 | 1,416,768 | 1,098,593 |
| வாடகை | 7,625,305 | 7,375,441 | 5,875,399 | 1,994,052 | 6,078,586 | 5,973,118 | 5,846,340 | 494,010 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 459,000 | 669,679 | 665,229 | 15,500 | 789,000 | 378,910 | 373,560 | 11,050 |
| ஏனைய வருமானங்கள் | 6,440,000 | 5,712,437 | 7,822,375 | 11,926,790 | 8,023,550 | 11,270,260 | 7,831,657 | 14,036,728 |
| மொத்தம் | 16,055,405 | 15,379,236 | 15,749,348 | 15,270,269 | 15,923,636 | 19,201,347 | 15,468,325 | 15,640,381 |

### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு மொத்த வருமானம் ரூபா 16,055,405 தொகையாகக் காணப்பட்டதுடன் சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 15,379,236 தொகை காணப்பட்டது. ரூபா 15,640,381 தொகைக்கான ஆரம்ப நிலுவையுடன் ரூபா 31,019,617 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட போதிலும், ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 15,749,348 தொகை காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட மொத்த நிலுவைத் தொகை ரூபா 15,270,269 ஆகும். அறவீடுகளின் முன்னேற்றம் 51 சதவீதமாகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | கருத்துரை வழங்கியிருக்கவில்லை. |

### 2.3.3 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|

(அ) **வீதவரி**

| | | |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை ரூபா 832,863 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 1,121,392 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 1,954,255 தொகை அறவிடப் பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 905,506 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 1,048,749 தொகை நிலுவை யாகக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள், ஆரம்ப மீதியில் மற்றும் சிட்டையிடல்களில் 46 சதவீதம் அளவான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | மீதியாகவுள்ள நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்காக 2019 மே 27 திகதி முதல் 2019 மே 31 திகதி வரை 05 நாட்கள் பூராகவும் நடமாடும் சேவை ஒன்று நடாத்து வதற்கு தீர்மானித்துள்ளதுடன் அதன் பின்னர் காணப்படும் மீதி தொகைக்கு எழுத்தாணை வழங்குவதற்கு எதிர்பார்த் துள்ளேன். |

(ஆ) **ஏக்கர் வரி**

-------------------

| | | |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை ரூபா 47,200 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 6,060 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 53,260 தொகை அறவிடப் பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 9,770 தொகையாக காணப்பட்டமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 43,490 தொகை நிலுவை யாகக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ஆரம்ப நிலுவையில் மற்றும் சிட்டையிடலில் 18 சதவீதம் அளவான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை ஏக்கர் வரி செலுத்துமாறு எழுத்துமூலம் அறிவித்துள்ளேன். |

**2.3.4 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|

(அ) **கடை வாடகை**

| | | |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை ரூபா 501,748 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 3,950,050 தொகையான சிட்டையிடலுடன் ரூபா 4,451,798 தொகை அறவிடப்பட வேண்டியி ருந்தது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 2,450,008 தொகையாக காணப்பட்டமையால், ஆண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 2,001,790 தொகை நிலுவை யாகக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள், ஆரம்ப மீதியில் மற்றும் சிட்டையிடல்களில் 55 சதவீதம் அளவில் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக 2019 மே மாதம் இணக்க சபைக்கு சமர்ப்பித்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

(ஆ) **நில வரி**

-------------------

| | | |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை ரூபா 195,400 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 112,000 தொகையான சிட்டையிடலுடன் ரூபா 307,400 தொகை அறவிடப்பட வேண்டியி ருந்தது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 92,000 தொகையாக காணப்பட்டமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 215,400 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள், ஆரம்ப நிலுவையில் சிட்டையிடல் மற்றும் நிலுவைத் தொகையில் 30 சதவீதம் அளவில் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | இந்தப் பணம் காலாண்டு அடிப்படையில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**2.3.5 நீர்க் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஆரம்ப நிலுவை ரூபா 232,786 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 1,793,045 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 2,025,831 தொகை ஆண்டின் போது அறவிடப்பட வேண்டி யிருந்தது. ஆண்டிற்கான மொத்த அறவீடுகள் ரூபா 1,501,734 தொகையாகக் காணப்பட்டமை யால், ஆண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 524,097 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | மீதியான நிலுவைத் தொகையாகிய ரூபா 175,791 இற்கான தொகை வெளிக்களத்தில் அறவீடு செய்வ தற்காக சிவப்பு அறிவித்தல் அனுப்பப்பட்டதுடன் வெளிக்கள த்தில் சென்று அந்த பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**2.3.6 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதி யில் உள்ளவாறு ரூபா 2,314,709 தொகை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 8,780,656 முத்திரைக் கட்டணத் தொகை பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவை நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை அனுப்புமாறு மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் விண்ணப்பி த்துள்ளேன். |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும்

பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை (output) பெற்றுக் கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடந்த ஆண்டு மாகாண குறித்தொதுக்கிய ஏற்பாடுகளின் கீழ் கருவா வட்டாரம் நீர் செயற்திட்டத்தினால் நீர் வழங்கு வதற்காக 02 குழாய் கிணறுகள் நிர்மாணிப்பதற்காக ரூபா 1,594,704 தொகை நீர் வழங்கள் மற்றும் வடிகால் அமைப்பு சபைக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் நீர் ஊற்றுகள் இனங்காண முடியாமையால் மீளாய்வாண்டு வரை குறிப்பிட்ட கருமம் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | செயற்திட்டம் ஆரம்பிக்க முன்னர் சாத்தியக்கூறு ஆய்வு உரிய முறையில் மேற்கொண்டி ருக்கவில்லை. | இந்த செயற்திட்டத்திற்காக தற்போது காணப்படும் நீர் கொள்ளளவு போதியளவினதாக காணப்படாமையால் தற்போது காணப்படும் நீர் பம்பு பண்ணும் குமிழினை மையமாகக் கொண்டு குழாய் கிணறு ஒன்று நிர்மாணிப்பதற்காக தேசிய நீர் வழங்கள் மற்றும் வடிகால் அமைப்புச் சபைக்கு அறிவிக்கப்பட்டது. அதுவும் தோல்வியடைந்ததால் நீர் வழங்கல் சபைக்கு செலுத்தி யுள்ள பணத்தை பிரதேச சபை மீளப்பெறுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 9,324,508 தொகை செலவிடப்பட்டு 2018 ஆகஸ்ட் 27 திகதி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த சேதனப் பசளை செயற்களத்திற்கு தேவையான உபகரணங்கள் காணப்படாமையால் 2019 மே 10 திகதி அளவிலும், சேதன | செயற்களத்தி ற்கு தேவை யான உபகர ணங்களை பெற்று செயற் திட்டத்தின் | சிக்கல்களை தீர்க்க முடிந்த உடன் கிடங்குகள் வெட்டி குப்பைகளை மண்ணினால் மூடுவது நிறுத்தப்படுவதுடன் சேதனப் பசளை உற்பத்தி அலுவல்களும் ஆரம்பித்தல் |

| | | |
|---|---|---|
| உர செயற்களத்தின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. சபையினால் நாளாந்தம் சேகரிக்கப்படும் குப்பைகளை வகைப்படுத்தாமல் கொள்வனவு செய்திருந்த காணியில் முறையற்ற விதமாக அகற்றப்பட்டு மண்ணினால் மூடுதல் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. | நலன்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மேற்கொள்ளப்படும். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்க வில்லை. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் மற்றும் இலக்குகள் நெருங்குவதற்கு திட்டமிடப்பட்டு செயற்படுத்தப் பட வேண்டும். | நீண்ட கால திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

**ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 15 வெற்றிடங்களை நிரப்புவதற்கும், 07 மிகை பதவியணியினை முறைப்படுத்துவதற்கும் மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணி மிகைகள் பதவிக்கான முறைப்படுத்துவதற்காக மற்றும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு | அங்கீகரிப்பதற்காக திணைக்களத்திற்கு அனுப்பப் பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்க வேண்டும். | |

## 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தென் மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரின் தபபா/பபாகொ/ 2010/01 மற்றும் 2010 திசெம்பர் 27 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் கடைகளுக்கான அனைத்து உடன்படிக்கைகளும் 03 ஆண்டுகளுக்கு ஒரு முறை நாளது வரை ஆக்கப்பட வேண்டும். எனினும் சபைக்குச் சொந்தமான 206 கடைகளில் 167 இன் உடன்படிக்கைகளின் செல்லுபடியாகும் காலம் கடந்து இருந்ததுடன் அவற்றில் 23 கடைகளின் உடன்படி க்கைகளில் செல்லுபடியாகும் காலம் கடந்து 10 ஆண்டுகள் கடந்துள்ளன. 16 கடைகள் தொடர்பாக உடன்படி க்கைகள் மேற்கொண்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். | புதிய பெறுமதி மதிப்பீட்டின் பிரகாரம் உடன்படிக்கை மேற் கொள்ளப்பட்டிருக் கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) மேற்கூறிய சுற்றறிக்கையின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் அங்கீகாரம் இன்றி துணை வாடகைக்கு கொடுத்தல் எவ்விதத்திலும் மேற்கொள்ளப்படக் கூடாது என குறிப்பிட்டிருந்த போதிலும் சபைக்கு சொந்தமான 67 கடைகள் வாடகையாளர்களினால் துணை வாடகை கொடுக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். | புதிய பெறுமதி மதிப்பீட்டின் பிரகாரம் உடன்படிக்கை மேற் கொள்ளப்பட்டிருக்க வில்லை. |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குக் கிடைத்திருந்த ரூபா 4,250,000 தொகை பெறுமதியான 04 வாகனங்களை மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபைகளுக்கு கிடைத்தள்ள வாகனங்களின் உரிமையை உரித்தாக்க வேண்டும். | வாகனங்களை ஹக்மன பிரதேச சபைக்கு உரித்தாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுத்து ஏல விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**3.4.2 விளைவற்ற/ குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) **காணிகள் மற்றும் கட்டிடங்கள்** | | |
| சபைக்குச் சொந்தமான ரூபா 1,112,500 பெறுமதியான பழைய பிரதேச சபை அலுவலகம், பொது நூலகம் மற்றும் கராஜ் என்பன விளைவற்றுக் காணப்பட்டது. | விளைவற்றுக் காணப்பட்டசொத்துக்கள் ஆக்கபூர்வமான விடயங்களுக்கு ஈடுபடுத்த வண்டும். | எதிர்காலத்தில் அங்கு மருத்துவ நோய் ஆய்வு நிலையம் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

(ஆ) **மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள்**

| | | |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான ரூபா 1,070,000 தொகை பெறுமதியான 06 வாகனங்களை திருத்தி ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்காக அல்லது அப்புறப் படுத்தவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆக்கபூர்வமான கருமங்களுக்காக பயன்படுத்துதல் அல்லது பயன் படுத்த முடியாது எனின் அப்புறப்ப டுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். | உரித்தாக்கல் மேற் கொள்ளப்பட்ட உடன் இந்த 06 வாகனங்களை யும் அப்புறப்படுத்துவதற்கு அல்லது திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 07 செலவு விடயங்களில் சேமிப்புக் களின் கூட்டுத்தொகை ரூபா 7,824,032 தொகையாகக் காணப் பட்டதுடன் அப்பெறுமதிகள் 10 சதவீதம் முதல் 446 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | நடைமுறை சாத்தியமான முறையில் வருடாந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆண்டின் போது சுட்டிக் காட்டிய பிரதி கூல நிலைமை களை சிறந்த நிலைமைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 03 வருமான விடயங்களினை நெருங்கியிருக்காத இலக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 6,103,304 தொகையாக இருந்ததுடன், அப் பெறுமதிகள் 03 சதவீதம் முதல் 16 சதவீத வீச்சில் காணப்பட்டது. | நடைமுறை சாத்தியமான முறையில் வருடாந்த மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆண்டின் போது சுட்டிக் காட்டிய பிரதி கூல நிலைமை களை சிறந்த நிலைமைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியசரின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென்மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய தபபா/யஹ/ 01/ந.ச.லே இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியை வினவியிருக்காததுடன், உள்ளகக் கணக்காய்வு அறிக்கை களின் பிரதியும் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | உரிய ஏற்பாடுகளின் படி உள்ளகக் கணக்காய்வு முறைப்படி செயற்படுத்த வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்காய்வு திட்டம் தயாரிக் கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத் தில் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளும் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |